மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் விதியை மீறி கொடுத்தேன் என்று தான் சொன்னேன். உங்களுக்காகத் தான் செய்தேன். எனக்காக எதையும் நான் செய்வது இல்லை. உறுப்பினர்களைத் திருப்தி செய்வதற்காகத் தான் செய்தேன். It is a passing remark. It was not uttered seriously.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது. இன்றைக்கு நிதி ஒதுக்கீடு மசோதா வருகிறது. அதில் பேசுகிற போது யாரேனும் ஒருவர் இந்தக் கருத்தை எடுத்துப் பேசலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்போது, இதை பாயின்ட் ஆப் ஆர்டரில் பேச வேண்டிய அவசியம் இல்லை.

(ஊ) மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்திய மாநில அவையில் இந்திய துணைக் கண்டம் எதிர்பாராத அளவுக்கு ஜனநாயகத்திற்கு ஒரு மாசு கற்பிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. நீதித் துறையின் சுதந்திரத்தை அழிக்கவும், அச்சுறுத்தவும் திமிர் பிடித்த சிலர் அக்கிரமச் செயலை ஆரம்பித்து விட்டார்கள் என்றும், ஏப்ரல் 7ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் சபாநாயகர் தீர்ப்பு நீதித் துறையின் சுதந்திரத்தைப் சாகடிப்பது போல் இருக்கிறது என்றும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெல்லியில் மேல் சபையில் அவர்கள் அதை பேசினார்கள் என்றால் அதை நாம் இங்கே விவாதிக்க வேண்டியது இல்லை. (குறுக்கீடு) வெளியே யாரும் பேசலாம். நீங்கள் 234 மாண்புமிகு உறுப்பினர்கள் என் மேல் நம்பிக்கை, கான்பிடென்ஸ் வைத்து இருக்கும்போது அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். I have your full confidence love and affection அது போதும், அதுதான் முக்கியம். நீங்கள் இருக்கும்போது யாரும் வேண்டாம்.

(முற்பகல் 10-20)

(எ) திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக திருச்சி மாநகரத்திலே பரபரப்பூட்டுவதாகவும், அச்சுறுத்துகின்ற நிலையிலும், இன்றைய தினம் திருச்சியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம், கிட்டதட்ட 160-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயந்து, ஒளிந்து, வெளியே இருக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). . . .